முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | L.A.O.P | 136 | of | 2024 |

2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 24 –ம் நாளான இன்று

எதிர் மனுதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு. A. Raju, Gr–I BC, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | கருணாகரன் |
| தந்தை பெயர் | கோவிந்தன் |
| கிராமம் | |
| தொழில் | சிறப்பு வட்டாசியர் நில எடுப்பு |
| வயது | 47 |

நாள் 24.07.2026 – எ.ம.சா.1 (RW1)

**2 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ( மேற்படி கோருநர் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு மீண்டும் மதியம் 1.00 மணிக்கு எதிர் மனுதாரர் தரப்பில் சில கேள்விகள் கேட்க கேட்டுகொள்ளப்பட்டதாலும் மேற்படி சாட்சி நீதிமன்றத்தில் இருப்பதாலும் குறுக்கு விசாரணைக்கு அனுமதியளிக்கப்பட்டது)**

இந்த இடம் எடுப்பு என்பது தமிழ்நாடு இண்டஸ்ரியல் நோக்கத்திறக்காக கையகப்படுத்தப்பட்டு இழப்பீடு தொகை குறித்து லேண்ட் அக்குஷியசன் Rehabilitaion and Resettlement Act , 2014 திருத்த சட்டப்படி இழப்பீடு கணக்கீடு செய்து கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். கோரிக்கைதாரர் அவார்ட் தொகை கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. புதிய திருத்த சட்ட படி பலன்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். கோரிக்கைதாரர் மேற்படி நாங்கள் வழங்கிய அவார்ட் தொகை போதவில்லை என்று இந்த நீதிமன்றத்தை நாடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். நிலத்தை மதீப்பீடு செய்வதற்கு 4593 விற்பனை பதிவுகளை பார்வையிட்டோம். எடுக்கப்பட்ட நிலம் புஞ்சை நிலம் தான். அந்த சமயத்தில் சுற்று பகுதியில் Development ஏதேனும் இருந்ததா என்றால் தெரியவில்லை. 4593 விற்பனை பதிவுகளை பார்வையிட்டு ஒரு சதுரடி 60 ரூபாய் என்று நிர்ணயம் செய்தோம். நிலத்தை கையகப்படுத்தி அனைத்து பலன்களுடன் அவார்ட் தொகை ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

Sd/-S.Nagarajan,
Principal District Judge,
Kancheepuram.